# இது பசுமை விகடன் தந்த பரிசு 7 ஏக்கரில் அசத்தும் நண்பர்கள் !

## 10.02.2014

**பண்ணை அமைக்கத் தூண்டிய பசுமை விகடன் !**

எங்க தோட்டத்தில் இருக்கும் அத்தனையுமே, பசுமை விகடன் எங்களுக்குக் கொடுத்த பரிசுதான். பசுமை விகடனைப் படித்துத் தெரிந்து கொண்டதுதான் என்கிறார் நாகப்பட்டினம் மாவட்டம், நச்சினார்குடி கிராமத்தைச் சேர்ந்த சிவக்குமார்.

**பண்ணை அமைக்கத் தூண்டிய பசுமை விகடன் !**

நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த இலையமுதுகூடம் என்கிற கிராமம்தான் சொந்த ஊர். விவசாயக் குடும்பம்தான். ஆனாலும் படித்து முடித்ததும் வேலைக்காக துபாய் போய்விட்டேன். அதனால், விவசாயத் தொடர்பே இல்லாமல் போய்விட்டது. அங்கு என்னுடன் வேலை பார்த்த அமீது, பசுமை விகடனைப் பற்றி பேசிக்கொண்டே இருப்பார். அதைக் கேட்டு எனக்கும் ஆர்வம் வந்தது. துபாயில் பசுமை விகடன் புத்தகம் கிடைக்கும். ஆன் – லைனிலும் படிப்போம். ஒரு கட்டத்தில் இயற்கை விவசாயத் தாக்கம் அதிகமாகி, நாங்க இருவருமே ஊறுக்கு வந்துவிட்டோம். நான்கு வருடத்திற்கு முன் இந்த நிலத்தை வாங்கி, இயற்கை விவசாயத்தை ஆரம்பித்தோம். அமீதுதான் பண்ணையை முழுமையாக கவனித்துக் கொள்கிறார் என்றார் சிவக்குமார்.

**நெகிழ வைக்கும் விவசாயிகள் !**

பசுமை விகடனில் வரும் விவசாயிகளைப் பற்றி படித்தோம். அவங்க தோட்டத்திற்கே சென்றுவிடுவோம். அவங்க சொல்லக்கூடிய ஆலோசனைகள்தான் எங்களை முழுமையாக வழி நடத்திக்கிட்டிருக்கு. எந்தவிதப் பிரதிபலனும் எதிர்பார்க்காமல், அவங்க வேலைகளுக்கு இடையிலும் நேரத்தை ஒதுக்கி, தொழில்நுட்பங்களைத் தெளிவுப்படுத்துறாங்க. அதைப் பார்த்து பலமுறை நெகிழ்ந்து போயிருக்கிறேன். இந்தப் பண்ணையுடைய மொத்தப் பரப்பு ஏழு ஏக்கர். ஆறரை ஏக்கரில் பயிர்கள் இருக்கு. மீதி இடத்தில் ஆடு, மாடுகளுக்கான கொட்டகை, உரக்குழி, போர் ஷெட் என்று இருக்கு. நான்கு மாடு, முப்பது ஆடுகள் இருக்கு. இந்த நிலம் பல வருடமாக, விவசாயமே செய்யாமல், காடாக புதர் மண்டி கிடந்ததால்.. மண் ஓரளவுக்கு வளமாகவே இருந்தது. ஏக்கருக்க 3 டன் என்ற கணக்கில் தொழுவுரம் ஆட்டு எரு இரண்டையும் கலந்து, அடியுரமாக போட்டு சாகுபடியை ஆரம்பித்தோம்.

**ஒரு ஏக்கர் வாழையில் ரூ.40 ஆயிரம் !**

ஒன்றரை ஏக்கரில் 200 மாமரங்கள் இருக்கு. இந்த மரங்களுக்கு நான்கு வயதாகிறது. இப்பவே 50% மரங்கள் காய்ப்புக்கு வந்துவிட்டது. கடந்த வருடம் 300 கிலோ காய் கிடைத்தது. மா மரங்களுக்கு ஆறு மாதத்திற்கு ஒரு தடவை பஞ்சகவ்யா கொடுக்கிறோம். மாதம் ஒரு தடவை பாசன தண்ணீருடன் அமுதக்கரைசல் கொடுக்கிறோம்.

ஒரு ஏக்கரில் ஆயிரம் வாழை இருக்கு. குழிக்கு ஐந்து கிலோ மாட்டுத் தொழுவுரம் போட்டு வாழைக் கன்று நட்டோம். மூன்று மாதத்திற்கு ஒரு தடவை இலை நனையும் அளவுக்கு பஞ்சகவ்யா தெளிப்போம். மாதம்

ஒரு தடவை பாசன தண்ணீருடன் அமுதக்கரைசல் கொடுக்கிறோம். நல்ல தரமான தார்கள் கிடைக்கிறது. சராசரியாக 700 தார் கிடைக்கிறது. ஒரு தார் 90 ரூபாய் கணக்கில் மொத்தம் 63 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது. செலவு போக, 40 ஆயிரம ரூபாய் லாபம். இதுவரை இப்படி வாழையில் மூன்று தடவை லாபம் பார்த்துட்டோம்.

**ஒன்றரை ஏக்கரில் 36 மூட்டை நெல் !**

கடந்த வருடம் ஒன்றரை ஏக்கரில் சீரகச் சம்பா நடவு செஞ்சோம். இருபது நாளைக்கு ஒரு தடவை என்று மூன்று தடவை பஞ்சகவ்யாவைத் தெளித்தோம். பதினைந்து நாளைக்கு ஒரு தடவை பாசன தண்ணீருடன் அமுதக்கரைசல் கொடுத்தோம். அதை வைத்தே பயிர் நன்றாக வேர் பிடித்து வளர்ந்தது. ஒன்றரை ஏக்கரில் 36 மூட்டை (60 கிலோ மூட்டை) நெல் கிடைக்கிறது. அதைப் பார்த்து சுத்துப்பட்டு விவசாயிகள் எல்லாம் ஆச்சரியப்பட்டுப் போயிட்டாங்க.

**பட்டீஸ்வரம் கத்திரி !**

நெல் அறுவடை செய்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்னே உளுந்தைத் தெளித்துவிட்டோம். இதற்கும் பஞ்சகவ்யா, அமுதக் கரைசல் மட்டும்தான் கொடுத்தோம். ஒன்றரை ஏக்கரில் 500 கிலோ உளுந்து கிடைக்கிறது. ஒன்றரை ஏக்கரில் மல்பெரி போட்டிருக்கிறோம். இதற்கும் அமுதக்கரைசல், பஞ்சகவ்யா மட்டும்தான் கொடுக்கிறோம். மல்பெரி நட்டு இரண்டு மாதமாகிறது. பட்டுப்புழு வளர்க்கலாம் என்று இருக்கிறோம். ஆடு, மாடுகளுக்கும் இது தீவனமாக பயன்படும். காய்கறிக்காக ஒரு ஏக்கரை ஒதுக்கி அதில் பட்டீஸ்வரம் நாட்டுக்கத்திரி, தக்காளி, வெண்டை, வெங்காயம், கொத்தவரை, முள்ளங்கி எல்லாம் போட்டிருக்கிறோம். வெண்டை, கொத்தவரை, தக்காளி மூன்றும் காய்ப்புக்கு வந்தது. காய்கறித் தோட்டத்தை சுற்றி, தனியாக 150 வாழை இருக்கு என்றார். அரை ஏக்கரில் குளம் வெட்டி மீனும், குளத்து மேல் பரண் அமைத்து நாட்டுக் கோழியும் வளர்க்கும் ஐடியா இருக்கு. இதை ஒரு இயற்கை விவசாயச் சுற்றுலாதலமாக மாத்துவதுதான் எங்கள் இலக்கு என்றார்.

**தொடர்புக்கு**

சிவக்குமார், செல்போன் : 94456 56000

அமீது, செல்போன் : 96553 49870

**ஆதாரம் : பசுமை விகடன் வெளியீடு 10.02.2014 www.vikatan.com**